# கற்பகம்

திங்கள் இதழ்

Katpakam

விலை ரூபா 10.00

மலர்-07 ஏப்ரல் -2014 இதழ்-75


## குறளமுதம்-75

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-8 அறத்துப்பால் அன்புடைமை**

அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு

உலகத்தில் இன்பம் நுகர்ந்தவர் அடையும் சிறப்பு, அவர் இல்வாழ்க்கையில் அன்பு கொண்டு வாழ்ந்ததன் பயன் என்று அறிவுடையோர் கூறுவர்.

### வடமாகாண பனை தென்னை வள கூட்டுறவு நிறுவன பிரதிநிதிகள்

# தமது பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு முதல்வரிடம் எடுத்துரைப்பு!



வடக்கு மாகாணத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்களுக்கும், வடமாகாண முதலமைச்சர் உயர்திரு சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று யாழ். பொதுநூலக மண்டபத்தில் இம் மாதம் 26ம் திகதி நடைபெற்றது.

வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த மேற்படி கலந்துரையாடலுக்கு முதலமைச்சர் தலைமை தாங்கினார். இக்கலந்துரையாடலில், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், வடமாகாண கூட்டுறவுக்குப் பொறுப்பான திரு சயந்தன், வட மாகாண சபை உறுப்பினர்களான திரு பரஞ்சோதி, திரு சிவயோகம், அவுஸ்ரேலியாவிலிருந்து வருகை தந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரும் பனை வள நிறுவனங்களின்



(7ம் பக்கம் பார்க்க)

## பணிப்பாளர்களுக்கு கூட்டுறவுப் பயிற்சி

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை சுவீடன் கூட்டுறவு நிலைய நிதி உதவியுடன் மாவட்ட மட்டத்தில் நடத்தும் 4 நாள் பயிற்சித் தொடரில், ஒரு நாள் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர்களுக்கு தலைமைத்துவம், கூட்டுறவு முறைமை, தீர்மானம் எடுக்கும் முறைமை பற்றிய நுட்பங்கள் தொடர்பில் மே மாதம் 6ம் திகதி கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் சங்கங்கள், கொத்தணிகள், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவரும் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவருமாக தலா இருவர் வீதம் கலந்துகொள்ளதாக சமாசத்தினால் தெவிக்கப்படுகிறது.

## பனை தென்னை வளப் பகுதி கூட்டுறவு அபி.அலுவலர்களின் கடமைகள் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் கடமைபுரியும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் பனை தென்னை வளப் பகுதி நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் அலுவலகக் கடமைகளுக்கான உத்தியோகத்தர்களின் கடமை ஒதுக்கீடுகள் தொடர்பில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி சமாசம், கொத்தணிகள் மற்றும் சித்த வைத்திய சேவைச் சங்கம் என்பவற்றின் மேற்பார்வை மற்றும் அலுவலகக் கடமைகள் திருமதி கனகம்மா நல்லதம்பி (DOCD) அவர்களுக்கும், தெல்லிப்பளை, மானிப்பாய், பண்டத்தரிப்பு

(7ம் பக்கம் பார்க்க)

## புதிய பணியாளர்களுக்கு கல்விப் பயிற்சி

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களில் புதிதாக இணைந்த பணியாளர்களுக்கான கல்விப் பயிற்சி கடந்த 10ம் திகதி வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

சமாசத் தலைவர் திரு நா.கணேசன் அவர்கள் தலைமையில்

(7ம் பக்கம் பார்க்க)

**கற்பகம் வாசகர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

**சிந்தனைத்துளி**

"ஒரு கூட்டுறவு அமைப்பின் வளர்ச்சிக் குறிகாட்டியானது அதன் உறுப்பினர்களின் வளர்ச்சியூடாகவே அளவிடப்படுகின்றது"

# கற்பகக்கரு

## சமாசமும் அங்கத்தவர் நலத்திட்டங்களும்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமானது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் தமது அங்கத்தவர்கள், பணியாளர்கள் நலனில் முக்கிய கவனம் செலுத்தி செயற்பட வேண்டும் என்ற நோக்கோடு உருவாக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செயற்பட்டுக்கொண்டிருந்த இவ்வகைச் சங்கங்களால் அதாவது மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் அகிய மாவட்டங்களில் பனந்தொழிலையே தமது வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வருகின்ற உழைப்பாளர்களை அங்கத்தவராகக் கொண்டு உருவாக்கப்பட்ட இச் சங்கங்கள் சமாசத்தின் உறுப்புரிமைச் சங்கங்களாக இணைந்துகொண்டன.

1979ம் அண்டு உருவாக்கப்பட்ட சமாசம், 1980ம் ஆண்டு இத்தொழிலில் ஈடுபடுகின்ற அங்கத்தவர்களுடைய தொழில் ஆபத்து தொடர்பிலும் அதனால் ஏற்படக்கூடிய இழப்பு தொடர்பிலும் தலைவரை இழந்த குடும்பம் படக்கூடிய துன்பங்களை கருத்தில் கொண்டும் விபத்து ஓய்வுநலத் திட்டம் ஒன்று அனைத்து சங்கங்களினாலும் இந்நிறுவன முன்னோடிகளாலும் உருவாக்கப்பட்டது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட சமாசமானது ஆரம்பத்தில் அசாதாரண சூழ்நிலை காரணமாக திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட அங்கத்தவர்களின் தொடர்பை பெற்றுக்கொள்ள முடியாமையாலும் அதற்கு பிற்பாடு மேலும் யுத்தம் இறுக்கமான நிலையை அடைந்தததன் காரணமாக மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்ட அங்கத்தவர்களின் தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ். மாவட்டத்துக்குள்ளேயே சமாசத்தின் செயற்பாடுகள் முடக்கப்பட்டன.

சமாசத்தால் உருவாக்கப்பட விபத்து நலத்திட்டத்தின்மூலம் பாதிக்கப்பட்ட அங்கத்தவர்கள் அனைவரும் நலன்பெற்றுள்ளமை இத்திட்டத்தின் வெற்றியாகும். துரதிஷ்டவசமாக சமாசத்தால் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவருகின்ற நலத்திட்டங்களையும் அவர்களினால் பெற்றுக்கொள்ளமுடியாமல் இருப்பது வேதனைக்குரியதே.

தற்போது சமாசத்தின் விபத்து ஓய்வூதிய நலத்திட்டம் மிகவும் நல்ல முறையிலே விரிபுபடுத்தப்பட்டு மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் திட்டமாக, சமூக மேம்பாட்டு நலத்திட்டமாக கல்வி விருத்தி திட்டங்களாவும் செயற்படுத்தி இந்நிறுவனத்தை உருவாக்கிய சங்கங்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றிவருகின்ற ஒரு பொறுப்பு வாய்ந்த அமைப்பாக செயற்பட்டுக்கொண்டிருகின்ற இச்சமாசத்தை எதிர்காலத்திலம் மேலும் கால சூழலுக்குரிய வகையில் விரிவுபடுத்தி, சிறப்பாக செயற்படுத்தவேண்டிய பொறுப்பு இத்துறைசார்ந்த அங்கத்தவர்கள், பணியளார்கள் அனைவரினதும் தலையாய கடமையாகும் எனக் கற்பகம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

ஆசிரியர்

## சமாச கல்வித் திட்டத்தின் கீழான பயிற்சிகளுக்கு ஏற்பாடு

வடமாகாண சமாசத்தின் மாதாந்த கல்வி வேலைத் திட்டத்தின்கீழ் மே மாதம் மேற்கொள்ளப்படவுள்ள கல்விப் பயிற்சி திட்டம் தொடர்பில் மாதாந்த கல்வி அலுவலர் மாநாட்டில் ஆராயப்பட்டு பின்வரும் திகதிகளில் பின்வரும் சங்கங்களின் பயிற்சிகளை சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சங்கத்தின் கிளைக்குழுத் தலைவர், உப தலைவர், செயலாளர் ஆகியோருக்கான பயிற்சியும், பண்டத்தரிப்பு சங்கத்தின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியும் மற்றும் சங்கங்களின் கணக்காளர், கணக்குப் பதிவாளர், கணக்கு லிகிதர் ஆகியோருக்கான பயிற்சியும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சமாச கல்வி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

## மே மாதத்திலிருந்து பனங்கள், தென்னங்கள் விலைகளில் மாற்றம்

பனங்கள், தென்னங்கள் என்பவற்றின் விலையில் மே மாதம் 1ம் திகதியிலிருந்து மாற்றம் செய்யப்படவுள்ளது.

பனங்கள் போத்தல் ஒன்று கொள்விலை ரூபா 37.00, விற்பனை விலை ரூபா 50.00. தென்னங்கள் போத்தல் ஒன்று கொள்விலை ரூபா 46.00, விற்பனை விலை ரூபா 60.00. போத்தலில் அடைக்கப்பட்ட கள் 375 மி.லீற்றர் ரூபா 40.00, 625 மி. லீற்றர் ரூபா 80.00 ஆகவும் மாதாந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.



## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இருக்கவேண்டிய பண்புகள்

- நல்ல எண்ணம் நல்ல சிந்தனை கொண்டவராக இருத்தல்.
- சக பணியாளர்களுடன் ஒற்றுமையாக பழகும் தன்மை கொண்டவராக இருத்தல்.
- உண்மை பேசுபவராக இருத்தல். ஒழுக்கம் உடையவராக இருத்தல்.
- சுறுசுறுப்பாக செயற்படுபவராக இருத்தல்.
- தனது கடமையில் கவனம் மிக்கவராக இருத்தல்.
- தாம் சார்ந்த நிறுவனத்தின் உயர்ச்சியில் விடாமுயற்சி உடையவராக இருத்தல்.
- மனிதநேயம் மிக்கவராக இருத்தல். நேர்மையும் விசுவாசமும் உடையவராக இருத்தல்.
- இரக்கம், எவருக்கும் தீங்கு செய்யாத மனோபாவம் உடையவராக இருத்தல்.
- கல்வி அறிவுபெற்றவராகவும், துறைசார்ந்த அறிவு உடையவராகவும் இருத்தல்.
- தனது செயல்மூலம் நிறுவனத்துக்கு நற்பெயர் கிடைக்கச் செய்பவராக இருத்தல்.
- மேல் அதிகாரிக்கு மதிப்பளிப்பவராக இருத்தல்.
- கூட்டுறவுச் சட்டம், விதி, துணை விதி, நடைமுறை விதி தெரிந்தவராக இருத்தல்.
- தான்சார்ந்த நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாப்பவராக இருத்தல்.
- தான் சார்ந்த நிறுவனத்தின் அங்கத்தவர், பணியாளர்களுக்கு உதவுபவராக இருத்தல்
- "நான்" என்ற எண்ணத்தை விடுத்து "நாம்" என்ற எண்ணம் கொண்டவராக இருத்தல்.
- சுயஉதவி, பரஸ்பர உதவி புரியும் தன்மை கொண்டவராக இருத்தல்.
- சிக்கனம், சேமிப்பு பழக்கமுடையவராக இருத்தல்.
- கூட்டுறவுப் பண்புகளை அறிந்தவராக அதனைப் புரிந்து செயற்படுபவராக இருத்தல்.
- நிறுவனத்தின் உரிமையாளர்களை மதித்து நடப்பவராக இருத்தல்.
- நிறுவனத்தின் அனைத்துப் பகுதிகளிலும் குழப்பத்தை ஏற்படுத்தாதவராக இருத்தல்.
- தாம் சார்ந்த நிறுவனத்தின் சேவைகளை ஏனையவர்களுக்கு கூறுபவராக இருத்தல்.
- தான் சார்ந்த நிறுவனத்தின் பொருட்களைத் திருடாதவராக இருத்தல்.
- கடமை நேரத்தில் மது அருந்தாதவராக இருத்தல்.
- பொய்யான தகவல்கள்மூலம் நிதி மோசடியில் ஈடுபடாதவராக இருத்தல்.
- சக பணியாளர்களின் சுகதுக்க நிகழ்வுகளில் கலந்துகொள்பவராக இருத்தல்.
- நிறுவன கொள்வனவு பணிகளில் தரகுப் பணம் (நம்பிக்கைத் துரோகம்) பெறாதவராக இருத்தல்.

# வாசிப்பும் வாழ்க்கையும்



ஏப்ரல் 23, இந்நாள் உலக புத்தக தினமாக ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பான யுனேஸ்கோவின் வேண்டுகோளுக்கமைய பிரகடனப்படுத்தப்பட்ட நாளாகும். நாம் பல்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு தினங்களைக் கொண்டாடி வருகின்ற சூழ்நிலையில், மனித குல வளர்ச்சியின் அறிவுத் தேடலினை விருத்திசெய்கின்ற நூல்களின் சிறப்பினை உணர்ந்து அதனை பயன்படுத்தி அறிவினை வளர்த்துக்கொள்வதற்கான விழிப்புணர்வினை ஊட்டுகின்ற வகையில் உலக புத்தக தினத்தினை அறிவுலகவாதிகள், படைப்பாளிகள் அனைவரும் கொண்டாடுகின்றனர்.

உலகெங்கிலுமுள்ள பல்வேறு கலாசாரங்களைப் பற்றி விழிப்புணர்வு பெறுவதற்கு புத்தகம் ஒரு சிறந்த கருவியாக விளங்குவதனால் 1995ம் ஆண்டு உலக புத்தக தினம் பிரகடனப்படுத்தப்பட்டு வருடந்தோறும் ஏப்ரல் 23ம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வானது உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்ற சிறப்பு நிகழ்வாக உணரப்பட்டு கொண்டாடப்பட்டு வருவதற்கு உலகளாவிய ரீதியில் பல இலக்கியவாதிகள் இந்நாளில் பிறந்தோ, இறந்தோ இருக்கின்றமை காரணமாக அமையலாம்.

இங்கிலாந்தைச் சேர்ந்த தலைசிறந்த இலக்கியவாதியும் நாடக மேதையுமான வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்ததும் இறந்ததும் இந்நாளில்தான் என்பதனால் புத்தக தினம் இந்நாளில் கொண்டாடப்படுவதற்கான விசேட காரணமாக அமைகிறது.

உலகமறிந்த நாடக மேதை நாடக இலக்கியத்தை கவித்துவமாக உயிரூட்டம் செய்த ஷேக்ஸ்பியர் 1564ம் ஆண்டு ஏப்ரல் 23ம் நாள் பிறந்து 1616ம் ஆண்டு ஏப்ரல் 23ம் நாள் இறந்தார்.

புனைவு இலக்கியத்தில் கொடிகட்டிப் பறந்த உலக இலக்கியவாதிகளுக்கு ஆதர்ஷமாகவும் ஊற்றுக்கண்ணாகவும் விளங்குகின்ற 'டான் குயிக்சாட்' நாவலைப் படைத்த செர்வாண்டைஸ் என்பவர் 1616ம் ஆண்டு எப்ரல் 23ம் நாள் இறந்தார்.

ஆங்கிலக் கவிஞர் வில்லியம் வோர்ட்ஸ் வொர்த் 1770ம் ஆண்டு ஏப்ரல் 23இல் உயிர் துறந்தார்.

1915 ஏப்ரல் 23ம் நாளில் கவிஞர் ரூபார்ட் ப்ரூக் காலமானார். 1957 ஏப்ரல் 23இல் ராய்ஸ்டன் காம்ப்பெல் மறைந்தார்.

1992ம் ஆண்டு ஏப்ரல் 23ம் நாள் உலகப் புகழ்பெற்ற சினிமா இயக்குனர் சத்யஜித்ரே மறைந்தார்.

இவ்வாறு படைப்புலகத்தோடு நெருக்கமாகிவிட்ட ஏப்ரல் 23ம் நாளினை உலகப் புத்தக தினமாக கடைப்பிடிக்கவேண்டியதன் அவசியம் என்ன என்பதனை நாம் நோக்குதல் வேண்டும்.

உலகம் முழுவதும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றி சமநிலை ஏற்பட அறிவுத் தகவல்களைப் பரவலாக்குவதன் ஊடாக உலக சமநிலை அடைய வேண்டியதன் அவசியம் அனைவராலும் உணரப்பட்டமையாகும்.

அறிவுத்தள சமநிலையின் நோக்கில் 1972ம் ஆண்டு அனைத்து நாடுகளின் புத்தக ஆண்டு என்று அறிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னோடியாக 1971 ஒக்டோபர் 22இல் பிரசெல்ஸ் நகரில் அனைத்து நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள், நூலகர்கள், ஆவணத் தொகுப்பாளர்கள், பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மாநாடு ஒன்று நடைபெறறது.

இம்மாநாட்டில் அறிவியக்கத் தகவல் பரப்பும் நோக்கில் 10 கட்டளைகள் உருவாக்கப்பட்டன. இது ஒரு ஆரம்பமாக அமைந்தது. அக்கட்டளைகள் வருமாறு,

அனைவருக்கும் வாசிக்கும் உரிமை, படைப்பாளிகளை உருவாக்கும் சமூகச் சூழல் உருவாக்குதல், பதிப்புத்தொழில் வளர்ச்சி, நூலகங்களின் வசதிகள், நூலகங்கள் நாட்டின் கருவூலம், பதிப்பாளர்– வாசகர் இணைப்பு, புத்தகங்களைப் பராமரித்தல், பாதுகாத்தல் மற்றும் ஆவணப்படுத்தல், அனைத்து நாடுகள் மொழிகளின் புத்தகங்களின் பரிமாற்றம், வாசிப்புமூலம் உலக உறவு என்பனவே இப் பத்துக் கட்டளைகள் ஆகும்.

இப்பத்துக் கட்டளைகளின் அடிப்படையில் அனைத்து நாடுகளின் அறிஞர்களினால் தொடரப்பட்ட விவாதத்தின் விளைவாக 1996 ஏப்ரல் 23ம் நாள் அனைத்து நாடுகளிலும் முதல் முறையாக கொண்டாடப்பட்டது.

ஆனால் இன்று எம்மைப் பொறுத்தவரை வாசிப்பு பழக்கமானது வெகுவாக அருகிவிட்டது என்றே கூறலாம். பெரும்பாலும் யாருமே வாசிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றபோதும் அதற்கான மாற்று சிந்தனையுடன் இயங்குகின்றவர்கள் வெகுவாக குறைந்து காணப்படுகின்றனர்.

வாசிப்பற்ற சமூகம் ஊனமுற்ற சமூகமாக மாறிவிடும் வாசிப்பு இல்லையேல் சமூகத்தில் உயிர்ப்பினை தரிசிக்க முடியாது. புத்தகங்களுடன் உறவாடுபவர்கள் தம்மை புடம்போட்டுக் கொள்கின்றனர். மனிதர்களை அறிந்து கொள்கின்றனர்.அவர்களால் எதனையும் எளிமையாகவும் நிதானமாகவும் அணுகிக்கொள்ள முடிகிறது. ஒரு தலைமுறை வாசிப்பின் நுகர்ச்சியற்றுப்போய் அடுத்த தலைமுறையினை நல்வழிப்படுத்த முடியாது அல்லல் உறுகின்றது. இத்தகைய நிலையில் இருந்து சிறுவர்களை விடுவித்து அவர்களை நல்வழிப்படுத்தவேண்டியது இன்றைய புத்திஜீவிகளின் தலையாய கடமையாகும்.

தாம் வாசிக்காது விட்டாலும் இளம் தலைமுறையினரை வாசிப்பின் செயல்தளத்தில் இயங்க அனுமதியாதவர்கள்கூட சமூகத்தில் விரவிக் காணப்படுவதுடன் வெறுமனே பரீட்சை மையக் கல்வியின்பால் பற்றுறுதி கொண்டு செயற்படுகின்றவர்களினையும் சமகாலத்தில் தரிசிக்கவேண்டிய அவலம் உண்டு. ஆயினும் இவற்றின் மத்தியில் இருந்து சவால்களுக்கு முகம்கொடுத்து வாசிப்பின் மகத்துவத்தினை இளம்தலைமுறையினர் மத்தியில் கொண்டுசெல்ல வேண்டும்.

(8ம் பக்கம் பார்க்க)

# நிஜங்கள் பேசுகின்றன

சிறுகதை

பா.மதனபாரதி, அல்வாய்

"கத்தி இன்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று நடக்குது" என்ற கவிஞர் நாமக்கல் இராமலிங்கபிள்ளை எழுதிய இறவாவரம் பெற்ற வைரவரிகளை சித்தித்த சாந்தசொரூபியின் நண்பி வினோதினி, எதிர்வீட்டு சாந்தசொரூபியின் வீட்டுக்குள் நடக்கும் யுத்தத்துக்கும் இவ் வரிகள் பொருந்தும் என சிந்தித்தவாறு வேப்பமர நிழலில் இளைப்பாறியபடியே சாந்தசொரூபியின் குடும்பம் பற்றி சிந்திக்கத் தொடங்கினாள்.

சாந்தசொரூபியின் அப்பா சண்முகம் அன்பானவர், நேர்மையானவர், பண்பாக பழகும் இயல்புடையவர், அறிவுத்திறன் வாய்ந்தவர், தனது பிள்ளைகளைப் பற்றி எண்ணிக்கொண்டே செயற்படும் சிறந்த உழைப்பாளி. பரம்பரைத் தொழிலாகிய சீவல்த் தொழிலைச் செய்து தனது குடும்பத்தைக் கௌரவமாக வாழ வைப்பவர். சண்முகத்தின் மனைவி செல்லம், குடும்பத் தலைவிக்கே உரித்தான பண்புகள் உள்ளவர். சண்முகத்தின் எண்ணம் அறிந்து செயற்படுபவர். பிள்ளைகள் மீது பாசத்தைப் பொழிவார். அறுவரைப் பிள்ளைகளாகப் பெற்றவர். அதில் தவச்செல்வன், தமிழ்ச்செல்வன், தங்கச்செல்வன் என மூன்று ஆண் பிள்ளைகளைப் பெற்றார்கள். இல்லாவிடில் ஆறு பெண்களைப் பெற்றவர் பாராலும் பரம ஏழையாவர் என்னும் வாக்கியம் உண்மையாகிவிடும்.

சாந்தசொரூபியின் அப்பாவின் கடின உழைப்பு குடும்பம் கௌரவமாக வாழ போதுமானதாக இருந்தது. அதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்த சண்முகம் பெற்ற பயன், பிள்ளைகளைக் கல்விமான்களாக்கியது ஆகும். "கல்வி என்றால் கிலோ என்ன விலை?" எனக் கேட்கும் சூழலில் பிள்ளைகளைக் கல்வி கற்க வைத்தது ஒரு அசாத்தியமான சாதனையாகும்.

சாந்தசொரூபியின் கல்விப் பயணத்தில், ஆரம்பத்தில் அவளது உயர்கல்விக்கு வித்திட்டது பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் லிங்கம், தமது சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ் கற்கை நெறிக்காக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் காலடி எடுத்து வைப்பதற்கு வழிசெய்தார். பொதுமுகாமையாளர் லிங்கம் செய்த உதவியின் பயனாக சாந்தசொரூபி பலவற்றைக் கற்று தனது கணக்காளராகும் இலக்கினை நிறைவேற்றினாள். அவள் கணக்காளர் பட்டம் பெறுவதற்காக கற்கும் காலத்தில் தொண்டர் ஆசிரியராகவும், அரச சார்பற்ற நிறுவனமொன்றில் உளவியல் தொண்டராகவும், சனி, ஞாயிறு தினங்களில் தனது பட்டப்படிப்பையும் தொடர்ந்தாள். பின்பு கணக்காளர் பட்டம் பெற்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் பட்டமளிப்பு விழாவுக்காக செல்லவேண்டிய நிலையில் பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது கடன் உதவி வழங்கி பட்டமளிப்பு விழா நிறைவு பெற்று வந்ததும் அதற்காக சங்கத்தில் பாராட்டுவிழா நடத்தி ஒரு சிறு தொகைப் பணப் பரிசையும் வழங்கிக் கௌரவித்தது.

பட்டம்பெற்று பன்னிரண்டாம் நாள் ஆசிரியராக நியமனம் பெற்று பட்டதாரி ஆசிரியராக பிரபல பாடசாலையொன்றில் சிறப்புமிகு ஆசிரியராக மிளிர்ந்து கற்பித்துக் கொண்டிருக்கின்றாள்.

சாந்தசொரூபியின் தம்பி தவச்செல்வனுக்கு திறமையிருந்தும் அவனது கவனயீனத்தால் கையடக்கத் தொலைபேசியினால் பலவற்றை இழந்து தனியார் கல்வி நிலையங்கள் சிலவற்றில் கற்பிக்கின்றான்.

பிள்ளைகளின் உயர்ச்சி கண்டு பெற்றோர் உள்ளம் மகிழ்ந்து சமுதாயத்தில் உயர்வர். மதிப்புக்குரியவர்கள் பெருமையுடன் வாழும் நேரம் தவச்செல்வன் வடிவில் சுனாமி அடிக்கத் தொடங்கியது.

தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் சக ஆசிரியை ஒருவருடன் ஏற்பட்ட நட்பு காதலாக மாறி இன்று குடும்பத்தையே சின்னாபின்னமாக்கும் நிலைக்கு வந்துள்ளது. கடற்றொழிலாளர் இனத்தைச் சேர்ந்த தவச்செல்வனின் காதலி, இன்று அவர்களின் குடும்பத்தின் சந்தோசத்தையும் நிம்மதியையும் கெடுக்கின்ற கொடுமை நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இதேவேளை சாந்தசொரூபியை உயிருக்குயிராக பரிபூரணமாக சீதனம் எதுவுமின்றி விரும்பும் ஒருவனை அரச உத்தியோகம் இருந்தும் தூரம் அதிகம், சாதி வேறு என்பதனால் திட்டவட்டமாக மறுக்கும் அவளது தந்தை.

எல்லோரையும் உதாசீனம் செய்து காதல் வசப்பட்டுள்ள அவளுடைய தம்பி தவச்செல்வனின் நிலை கண்டு துவண்டு போயுள்ளார் தாய் செல்லம். பிள்ளைப் பாசத்தால் உருகி உருகி வாழ்வு கொடுத்த கணவனுக்கும் பெற்றெடுத்த பிள்ளைக்கும் இடையில் தினமும் போராடும் நிலை. சகோதரிகளோ மருண்டு போயுள்ளனர்.

அவள் தம்பியோ, இவை எதுவும் தன்னைப் பாதிக்காதவாறு தன் காதலை பெரிதாக எண்ணி போற்றி வளர்க்கின்ற கொடுமை.

மூத்த பிள்ளை சாந்தசொரூபி என அழகான பெயரைச் சூட்டினார்கள். அடுத்த ஆண் பிள்ளை. சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளைக்கு ஏங்கும் சமூகமாச்சே! அதனால்தான் சண்முகமும் செல்லமும் தம் மகனுக்கு தவச்செல்வன் என பெயரிட்டார்கள். தொடர்ந்து இரு பெண்பிள்ளைகள் வசந்தசொரூபி, சிவசொரூபி என அழைக்கப்பட்டார்கள். மற்றைய இரண்டு ஆண் பிள்ளைகளுக்கும் தவச்செல்வன், தமிழ்ச்செல்வன் என பெயரிட்டார்கள்.

ஆறு குழந்தைகளும் சந்தோசமாகவே வளர்ந்தார்கள். செல்வந்த வீட்டுப் பிள்ளைகளுக்குக் கிடைப்பதெல்லாம் கிடைக்காவிட்டாலும், அத்தியாவசியமானவை எல்லாம் கிடைத்தன. வருடம், தீபாவளிக்கு புது உடுப்பு முதல் இனிப்பு பண்டங்கள், விளையாட்டுப் பொருட்கள் வரை தேவையான எல்லாம் கிடைத்தன. வாழ்க்கையின் வசந்த காலம் இளமைக் காலம் என்பது அவர்களுக்க உண்மையாகவிருந்தது. நாட்கள் நகர்ந்தன. பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானார்கள்.


சாந்தசொரூபி அவளது தந்தை சண்முகத்தின் உழைப்பினாலும் பொது முகாமையாளர் லிங்கம் காட்டிய நேரான பாதையினாலும் கணக்கியல்

(6ம் பக்கம் பார்க்க)


## மாதாந்த ஓய்வூதியம் பெறும் யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களில் சிலரைப் படங்களில் காணலாம்.



திரு ஜே.பி.குணரத்தினம்
சமாசம்



திரு க.சண்முகம்
சமாசம்


திரு யா.இம்மானுவேல்
சுன்னாகம் சங்கம்



திரு மு.ஞானச்செல்வம்
சுன்னாகம் சங்கம்


திரு கி.குணரத்தினம்
பண்டத்தரிப்பு சங்கம்



திரு யோ.அல்பிரட் அந்தோனிப்பிள்ளை
பண்டத்தரிப்பு சங்கம்



திரு செ.இராசநாயகம்
அரியாலை சங்கம்



திரு நா.திருச்செல்வம்
அரியாலை சங்கம்


திரு சி.சுதாகரன்
யாழ்ப்பாணம் சங்கம்


திரு வ.றோகு மரியதாஸ்
வேலணை சங்கம்


திரு க.பாலசிங்கம்
சங்கானை சங்கம்


திரு சி.யோசப் கொன்விக்ரர்
பருத்தித்துறை சங்கம்


திரு செ.ஞானசேகரம்
சாவகச்சேரி சங்கம்


திரு சி.நவரத்தினம்
சாவகச்சேரி சங்கம்


திரு சி.மகாலிங்கம்
சாவகச்சேரி சங்கம்

## உன் நினைவுகளோடு.....



வானத்து நிலவின்
முழுமதி முகத்தாளே
சில்லென்ற காற்று
மெல்லெனத் தாலாட்டும்
சிற்றிடை கொண்டவளே
சிற்பங்கள் பல கொண்டு
அலங்காரம் பல செய்த
சிற்பத் தேர் அதுபோல்
அளவோடு உடல் செய்த
என் அலங்காரத் தூரிகையே
பிறப்புக்கு பெருமை சொன்ன
என் உள்ளத்து மங்கையே
நீ நடந்தாலும் இருந்தாலும்
சிரித்தாலும் அழுதாலும்
பார்த்தாலும் பார்க்காமல்
உன் பாதை வழி போனாலும்
உன் எண்ணங்கள் என்மீது
இல்லாமல் போனாலும்
உன் எண்ணங்களால்
நான் நிரம்பி போனேன்
உன் மூச்சுக் காற்றோடு நான்
ஒன்றாகக் கலந்துபோனேன்
இனி நான் இந்த மண்ணில்
மரணித்து விழும்வரை
உன் நினைவுகளோடுதான்
வாழ்ந்திருப்பேன்

T.கமல்
காரைநகர் ப.தெ..கூ..சங்கம்

## யாருக்கு மேதினம்?

பாரினிலே பாடுபட்டு உழைத்த
பாட்டாளிக்கு வேண்டும் மேதினம்
நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமுமாய்
மாடாய் உழைத்து
ஓடாய்ப் போன உழவனுக்கு
வேண்டும் மேதினம்!

அடுப்படி வேலையும்
எடுபிடி வேலையும்
பெண்களுக்கே உரியதென்ற
அடிமை வாழ்வு ஒழிய
பெண்ணுக்கு வேண்டும் மேதினம்!

கடலை நம்பி.
அதன் மீனை நம்பி
வயிற்றை வளர்க்கும்
மீனவனுக்கும் வேண்டும் மேதினம்!

இனிமையான இங்கித வாழ்வு
இனிதே அனைவருக்கும் கிடைக்க
வேண்டும் மேதினம்!
வேண்டும் மேதினம்
நீண்டநாள் உழைக்கும்
உழைப்பாளிக்கும் என்றும்
வேண்டும் மேதினம்

பா.மதனபாரதி, அல்வாய்.

## தொழிலாளர் திருநாள்

தொழிலாளர் திருநாள் உலகத்திலின்று
தோன்றியது அந்த மே மாதம் ஒன்று
பாடுபட்ட உள்ளங்களின் அமைதி நாள்
உலகெங்கும் கொண்டாடும் நன்நாள்

நெற்றி வியர்வை சிந்தி உழைத்த
மக்களின் பொன்னான நாள்
தொழிலாளர் ஒன்று சேர்ந்து
பெற்றிட்ட நன்நாள்
தொழிலாளர் தினம் - அது
தொல்லையற்ற நன்நாள்
தொழிலாளர் எழுச்சி நாள்
மே மாதம் ஒன்று

சரிநிகர் சமானமாக மக்களை
மதித்திடும் நன் நாள்
உழைத்த மக்களின்
உரிமை கொண்டாடும் நாள்
மே மாதம் வந்த மேதின நன்நாள்

உழைப்பவர் உலகமே ஒன்றுசேர்ந்து
உரிமைகள் பல பெற்று
உலக விடிவுக்காய் உழைத்து
உருண்டையான உலகில்
அனைவரும் ஒன்றுசேர்ந்திடுவோம்
தொழிலாளர் பெருமக்களே வாழ்க!
தொல்லைகள் யாவும் ஒழிக!

-அ.சீதாராம், பருத்தித்துறை-

## பனை தென்னை வளங்கள்

இயற்கை எமக்களித்த
இனிய கொடையாம் – நம்
பனை தென்னை வளங்கள்
வளம் கொழிக்கும்
பயன்மிகு வளமாம் – எம்
பனை தென்னை வளங்கள்

நிலமோடு நீண்டு வளர்ந்து
வளமிகு பயன்கள் தந்து
செழுமை மிகு வாழ்வு தனைச்
சிறப்புற நல்குமாம் – எம்
பனை தென்னை வளங்கள்

கற்பக தருவென எம்மண்ணில்
வியத்தகு பயனளித்து வாழ்வினில்
மிகத்திறன் வளம் கொடுத்து
உயர்தர வாழ்வளிக்குமாம் –எம்
பனை தென்னை வளங்கள்
மாடாய் உழைத்திடும் – தெரு
நாயாய் அலைந்திடும்
ஓடாய் கிடந்து உழைத்த –நம்
வீடுகள் இன்று வெளிச்சக்கூடுகளாக
மாறிடச் செய்த மந்திரக்கோள்கள்
இந்த பனை தென்னை வளங்கள்

உழைப்பு சேமிப்பு சிக்கனம்
ஊக்குவித்தல் உதவுதல் உறுதிகொள்ளல்
பகிர்தல் மகிழ்தல் படித்தறிதல்
இவைகளை கூட எமக்களித்த
இனிய வரமாய் எமக்காய் வந்த
அரிய பொக்கிஷங்கள் இந்த வளங்கள்
இயலாமை முயலாமை துணியாமை
என்பன போக்கி
அசராமை அகலாமை அயராமை
என்பன தந்து – எம்மை
அவனியில் தலைநிமிர
ஆவனம் செய்து தந்த வளங்கள்

பனை தென்னை வளங்கள் இங்கு
வளங்கள் பல கொழிக்கும் வரங்கள்
அடி முதல் நுனிவரை அனைத்தும்
பயன்தரும் கொடைகள்
வாடிக்கிடந்த எம் வாழ்வை
மலரச் செய்த மகிழும் பூக்களாம்
எம் வளம் கொழிக்கும்
பனை தென்னை வளங்கள்

பா.சத்தியசீலன்
கோண்டாவில் ப.தெ.சங்கம்

## நிஜங்கள் ........

3ம் பக்கத் தொடர்ச்சி

பட்டதாரியாகி ஆசிரியரானாள். அவள் தம்பி தவச்செல்வனோ கலைப்பட்டதாரிப் படிப்பை இடைநிறுத்திவிட்டு காதல் உலகை ஆண்டு கொண்டிருக்கின்றான். தங்கச்செல்வன் சட்டக் கல்லூரியில் கற்றுக்கொண்டிருக்கின்றான். அடுத்த தங்கை வசந்தசொரூபி பல்கலைக்கழக படிப்பை இடைநிறுத்தி வெளிநாடு செல்லத் தயாரா கிக்கொண்டிருக்கின்றாள். இளைய பிள்ளை கள் இருவரும் பிரபல பாடசாலை மாண வர்களாக விளங்குகின்றார்கள்.

சண்முகத்தின் பகீரத உழைப்பி னால் கிடைத்த கௌரவம், மதிப்பு, சண்மு கத்தின் கனவு, கல்யாணச் சந்தையில் விலை போகவேண்டிய சகோதரிகள், தாய் செல்லத் தின் ஆரோக்கியம் இவை எல்லாம் தவிடு பொடியாகும் நிலை ஏற்பட்டுள்ள இந்த நேரத் தில், காதல் நோயால் நிகழும் இழப்புக்களை உணரும் நிலையில் தவச் செல்வன் இல்லை.

(8ம் பக்கம் பார்க்க)

## தமது பிரச்சினைகள் ............ 1ம் பக்க தொடர்ச்சி

ஸ்தாபகருமாகிய திரு க.நடராசா, பனை தென்னை கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் முக்கிய விடயமாக திக்கம் வடிசாலையின் தற்போதைய நிலை தொடர்பாக திரு சயந்தன் அவர்களால் சபைக்கு தெரியப்படுத்தப் பட்டது. இவ்விடயம் தொடர்பாக சில தகவல்களை வடக்கு மாகாண முதலமைச்சர் திக்கம் வடிசாலையின் பொதுமுகாமையாளர் திரு நவநேசன் அவர்களிடமிருந்து கேட்டறிந்துகொண்டார். இவ்விடயம் முக்கிய விடயமாக ஆராயப்பட்ட போதும், வடக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற பனை தென்னை வள சங்கங்களின் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பான தகவல்களும் உரியவர் களிடமிருந்து பெறப்பட்டு அதற்கான தீர்வுகளும் விரைவாக பெற்றுக் கொடுக்கப்படும் என கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்களால் கருத்து முன்வைக்கப்பட்டது.

மேலும் திக்கம் வடிசாலை விடயம் இன்னொரு அமைச்சோடு தொடர்புபட்டிருக்கின்ற காரணத்தினால் அவர்களுடன் வடக்கு மாகாண சபை கூட்டுறவுத் துறைக்கு பொறுப்பானவர்களும் ஏனைய பிரதிநிதிகளும் இணைந்து கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

ஏனைய விடயங்களாக செயற்கைக் கள் விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலுள்ள பனை தென்னை வள சங்கங்கள் படிப்படியாக அச்செயற்பாடுகளை குறைத்துக் கொள்ள வேண்டுமெனவும் யாழ். மாவட்டத்திலுள்ள சங்கங்களினால் போத்தலில் அடைக்கப்படும் பனங்கள்ளினை கொள்வனவு செய்து விற்பனை செய்யவேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும் முன்னர் பனங்கள்ளினை போத்தலில் அடைக்கும் தொழிற்சாலைக்கான அனுமதிப் பத்திரம் பெற்று செயற்பட்ட சங்கங்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் செயற்படமுடியாமல் போயிருப்பின் அச்சங்கங்கள் அதற்கான அனுமதிப்பத்திரத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்களால் தெரிவிக்கப் பட்டது.

## பனை ........ 1ம் பக்க தொடர்ச்சி

மற்றும் வலிகாமம் பிரதேச பனை தென்னை அ.கூ.சங்கங்களின் மேற்பார்வை, அலுவலகக் கடமை மற்றும் புள்ளிவிபரம் போன்றவை திரு தி.வித்தககலாநிதி (CDO -I) அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

திரு சி.சுசீந்திரன் (CDO - II) அவர்களுக்கு, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை ப.தெ.வ.சங்கங்கள், தென்மராட்சி, வடமராட்சி கொத்தணிகள், மற்றும் தென்மராட்சி, வடமராட்சி பிரதேச ப.தெ.வ.சங்கங்களின் மேற்பார்வை, அலுவலகக் கடமை மற்றும் புள்ளிவிபரம் போன்ற கடமைகளும், திரு அ.விமல்ராஜ் (CDO II) அவர்களுக்கு, யாழ்ப்பாணம், அச்சுவேலி, வலிகாமம் கொத்தணி, சித்த வைத்திய சங்கம் என்பவற்றின் மேற்பார்வை, அலுவலகக் கடமை மற்றும் புள்ளிவிபரம் போன்ற கடமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

கொடிகாமம், சாவகச்சேரி, அரியாலை ப.தெவ.சங்கங்களின் மேற்பார்வை- கடமைகள் திரு பொ.மகேஸ்வரன் (CDO III) அவர்களுக்கும், கோண்டாவில், கோப்பாய், சுன்னாகம், சங்கானை ப.தெ.வ.கூ.சங்கங்களின் மேற்பார்வை கடமைகள் திரு தா.தவமன்னன் (CDO III) அவர்களுக்கும், அனலைதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் ப.தெ.வ. அ.கூ.சங்கங்களின் மேற்பார்வை கடமைகள் திரு சு.அகிலன் (CDO III) அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதாக உதவி ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய பணியாளர் ........ 1ம் பக்க தொடர்ச்சி

நுடைபெற்ற இப்பயிற்சி நெறியினை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்கள் ஆரம்பித்து வைத்து இப்பயிற்சியின் முக்கியத்துவம் தொடர்பில் உரையாற்றினார்.

இதில் வளவாளர்களாக கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு இ.புவன்ராஜ், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் திருமதி வே.செல்வத்தினம் ஆகியோர் கலந்துகொண்டு 'சங்கங்களின் கணக்கு வைத்தல் முறையில் படிவங்களின் அவசியம்' என்ற தலைப்பிலும், 'கூட்டுறவு முயற்சியும் பணியாளர் மனப்பாங்கும்' என்ற விடயங்கள் தொடர்பில் விரைவுரையாற்றினர்.

## கூட்டுறவு அமைப்பில் அங்கத்தவரும் அரசும்

### படிமுறை வளர்ச்சி

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இணைந்து செயற்படுவதன் மூலம் அங்கத்தவர்கள் பெற்ற சிறப்புக்களை நாம் படியுயர்ச்சிகள் வாயிலாக விளங்கிக்கொள்ள முடியும்.

சாதாரண பொதுமக்களிலிருந்து இத்துறையில் ஈடுபடுவதற்காக சங்கத்தின் உறுப்பினராக முறைப்படி இணைந்துகொண்ட ஒரு அங்கத்தவர், ஓராண்டு பூர்த்தி பெற்றதும் கிளைப் பொதுச்சபை உறுப்பினராகும் தகுதியைப் பெற்று, பின்பு கிளைக்குழு உறுப்பினராகவும், சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினராகவும் விளங்கி, பின்பு சங்க நிர்வாகத்துக்கு தெரிவுசெய்யப்பட்டு இறுதியில் சங்கத்தின் தலைவராக, கொத்தணியின் தலைவராக, சமாசத்தின் தலைவராக தமது படி நிலைகளை உயர்த்திக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை இக்கூட்டுறவு அமைப்பு ஜனநாயக ரீதியில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இது ஒரு சாதாரண மனிதனை சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்கும் அவனை ஆளுமைப்படுத்திக்கொள்வதற்கும் ஏனையவர்கள் மத்தியிலிருந்து மதிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் இக்கூட்டுறவு அமைப்பு உறுதுணை புரிகின்றது.

இதேபோல கூட்டுறவுத் துறையை வளப்படுத்திக் கொள்வதற்கு அரசும் பின்வரும் படிமுறைகளில் செயற்பட்டு வருகின்றது.

மக்களால் தெரிவுசெய்யப்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலிருந்து கூட்டுறவுத்துறைக் கென கூட்டுறவு அமைச்சை உருவாக்கி அமைச்சு செயலார், சிரேஸ்ட செயலாளர் கூ.அபி.ஆணையாளரும் கூ.சங்கங்களின் பதிவாளரும் [மாகாணம்], கூ.அ. உ.ஆணையாளர் [மாவட்டம்], மாவட்ட கூ.அ.அலுவலர், கூ.அ.அலுவலர் எனும் படிமுறையின்படி கூட்டுறவு நிறுவனங்களை நல்வழிப்படுத்தவும் மேற்பார்வை செய்யவும் கணக்காய்வு செய்யவும் என அரசு கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவுகின்றது.

## சங்கங்களின் கடந்தாண்டு உற்பத்தி விபரம் கோரல்

பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவு நிறுவனங் களினால் 2013ம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லம், போத்தற் கள் போன்வற்றின் விபர ங்களை கூட்டுறவுத் திணைக்களம் கோரியுள்ளது.

இவற்றில் ஆயிரம் கிலோ கிராமுக்கு அதிகமாக பனை வெல் லம் உற்பத்தி செய்த சங்கங் களின் விபரமும் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட போத்தற் கள்ளினை உற்பத்திசெய்த சங்கங்களின் விப ரங்களையுமே திணைக்களம் கோரியுள்ளது.

## மே நாள் நிகழ்வுகளை நடாத்த ஏற்பாடு

உலகத் தொழிலாளர் தின மாகிய மே தினம் கூட்டுறவாளர் களால் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் ஏற்பாட்டில் 2014ம் ஆண் டுக்கான மே தினத்தை கூட்டுறவா ளர்கள் அனைவரும் இணைந்து யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சபைத் தலைவர் தலைமையில் நடத்துவ தற்கான அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூட்டு றவுச் சபை வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

## அரச காணியில் கிளைநிலையம் அமைக்க விண்ணப்பிக்கலாம்

பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் தமது கிளை நிலையங்களை அமைப்பதற்காக அரச காணிகள் தேவைப்படின் காணியை இனங் கண்டு குறித்த பிரதேச செயல கத்துக்கு விண்ணப்பிக்குமாறு கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளரால் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கங்களால் தெரி வுசெய்யப்பட்ட காணி விபரங்களை வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங் களில் பூர்த்தி செய்து 4 பிரதிகள் சமர்ப்பித்தல் வேண்டும் என தெரி விக்கப்படுகிறது.

**நிஜங்கள்..** 6ம் பக்கத் தொடர்ச்சி

எதிர்காலம் ஒளிமயமானதாகுமா? இரு ண்டு விடுமா? சண்முகத்தின் உழைப் புக்கு அவப்பெயர் ஏற்பட்டுவிடுமா? தவச்செல்வனின் வாழ்வு சீரழிந்து விடுமா? சகோதரிகள் வாழ்வு கேள்விக் குறியாகிவிடுமா? என இப்படி விடை தெரியாத எத்தனையோ வினாக்களை மனதில் சுமந்தபடி சாந்தசொரூபி. எல்லா பிரச்சினைகளையும் இறைவன்தான் நல்லபடியாக தீர்த்து வைக்கவேண்டும் என எண்ணிக்கொண்டிருந்த வினோ தினி, தாயார் அவளை அழைக்கும் குரல் கேட்டு சுயநினைவுக்கு திரும்பு கின்றாள்.

(யாவும் கற்பனை)

## வாசிப்பும் .........

3ம் பக்கத் தொடர்ச்சி

இன்றைய பொழுதில் வாசிப்பற்றுப் போவ தனால் மாணவர்கள் தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்காக இடம்பெறுகின்ற போட்டிப் பரீட்சைகளில் சித்திபெறத் தவ றுகின்றமையும் கண்கூடு.

வாசிப்பு ஊடாகவே மொழித் தேர்ச்சி என்பது சாத்தியமாகும். தேர்ந்த வாசிப்பின்மையினால் தொழித்தேர்ச்சியில் தோற்றுப்போகின்ற இளம் தலைமுறை யினரை அவர்களது கல்விப் பெறுபேறு களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

வாசிப்பதனால் மனிதன் பூரண மடைகிறான். வாசிப்பினூடாகவே அறிவு சார்ந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடி யும். இத்தகைய சிறப்பும் அவசியமும் வாய்ந்த வாசிப்பு பண்பாடு மேலோங்கி, உலக புத்தக தினத்தை நாம் அனைவ ரும் கொண்டாடுதல் சிறப்புக்குரியதாகும்.




எமது கொத்தணியின் தயாரிப்பான

வரணி பனஞ்சாராயம்

தற்போது 750 மி.லீற்றருடன், 375, 180 மி.லீற்றர் ஆகிய அளவுகளிலும் கிடைக்கின்றன.

கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்



பாலர் பாடசாலை மாணவர்,ஆசிரியர் களுக்கு இலவச சீருடைத்துணி வழங்கல்

நலன்புரித் திட்டங்கள்

அங்கத்துவ சங்கங்களின் அங்கத் தவர், பணியாளர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

வாடகை உழவு இயந்திர சேவை



தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி



பருத்தித்துறை வீதி, வரணி [வரையறுக்கப்பட்டது] 021 321 1653


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2014ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது.